RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S134

# Contemporary Life Woes in "Pudhukavithai" (Free Verse)

## புதுக்கவிதையில் தற்கால வாழ்வியல் அவலங்கள்

**S. Veeralakshmi [a,*]**

[a] Department of Tamil Language, Devangar Arts College, Aruppukottai-626101, Tamil Nadu, India.

*Corresponding author Email: ssjaikumar74@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S134

Received: 13-04-2022; Revised: 17-07-2022; Accepted: 23-07-2022; Published: 20-08-2022

**Abstract:** The Pudukavithai, known as Vasanakavidhai, Vidunilaippa, and light poetry, were written with different content. In the initial period, new poems were sung, highlighting social reform ideas like women's emancipation, poverty, education, etc. Over time, poems have been created with the realities and miseries of contemporary life in mind. The aim of this article is to explore cultural transgression, personal tragedies, and the perversity of the human mind. Tamil literature takes values from ancient Tamil life in terms of culture and civilization. This study aims to document how the tragedies of events in contemporary life have been symbolised in the new poems that have emerged in western countries over a long tradition.

**Keywords:** Culture, Pudukavithai, Humanism, Social Disasters,

**Language:** **Tamil**

### முன்னுரை

வசனகவிதை, விடுநிலைப்பா, இலகுகவிதையென அழைக்கப்பட்ட புதுக்கவிதை பல்வேறு உள்ளடக்கங்களைக் கொண்டு எழுதப்பட்டவை. தொடக்கக் காலகட்டத்தில் பெண்விடுதலை, வறுமை, கல்வி, முதலான சமூகசீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துரைப்பவையாகக் புதுக்கவிதைகள் பாடப்பட்டன. காலபோக்கில் சமகால வாழ்வியல் யதார்த்தங்களையும் அவலங்களையும் தன்னுள் கொண்டு கவிதைகள் படைக்கப்பட்டன. அதனில் பண்பாட்டு மீறலையும் வாழ்வியல் துயரங்களையும் மனித மனத்தின் வக்கீரகுணங்களையும் ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆய்வுநோக்கம்

பண்பாடு. நாகரிகம், கலாச்சாரம் போன்றவற்றில் தொன்மைச்சான்ற தமிழர், வாழ்வில் விழுமியங்களை எடுத்தியம்புபவை தமிழ் இலக்கியங்கள். நீண்ட நெடிய இம்மரபில் மேலை நாட்டுத்தாக்கத்தில் உதித்த புதுக்கவிதைகளில் சமகால வாழ்வில் நிகழ்வுகளின் அவலங்கள் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆவணப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### ஆய்வுமுறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறைமையைக் கொண்டது. முதல்நிலை தரவுகளாக இக்கால கவிஞர்களால் படைக்கப்பட்ட புதுக்கவிதைகளில் வாழ்வில் துயரங்களைப் பகுத்து பகுப்பாய்வு அணுகுமுறையை கையாண்டு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. துணைநிலைச்சான்றுகளாகப் பண்பாடு சார்ந்த நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## பண்பாடு விளக்கம்

பண்பாடு என்பது ஓர் இனத்தின் திருந்திய ஒழுக்கமாகும். பண்பாடு என்பதற்கு மொழிஞாயிறு தேவநேயபாவாணர் அவர்கள் "பண்படுதல் என்றால் சீர்படுதல் அல்லது திருத்தல் எனப் பொருள்படும். பண்பாடு பல பொருட்கு உரியதேனும், நிலமும் மக்கள் உள்ளமும் பற்றியே பெருவழக்ககாகப் பேசப்பெறும்." என்று கூறுகிறார் (Devanayapavanar, 2017). மேலும் பண்பாடு என்பது "மனிதனுடைய வாழ்நிலைகளில் சாராம்சமாக காணப்படுகிற ஒழுக்கலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சுற்றி இருப்பவை பற்றிய உணர்வுகள் முதலியவற்றைக் குறிப்பது பண்பாடு" என்று கூறுகிறார் (Natarajan, 2006). நிலமும் மக்கள் உள்ளம் சார்ந்த பண்டைய தமிழ்ச்சமுதாயம் காத்து வளர்த்த பண்பாடு, நாகரிகம் மனித சமூகத்தால் இன்று பின்பற்றப்படுகிறதா? என்பது கேள்வியாக உள்ளது

## மனிதநேயம்

ஒரு நாள் சென்றாலும் பல நாள் சென்றாலும் தலைநாள் கண்ட விருப்பத்துடன் புரவலர்களைப் பேணும், பண்பாட்டு வழிவந்த நனிச்சிறந்த தமிழர் நாகரிகம் மனிதநேய பண்புடன் திகழ்கிறதா என்ற கேள்வி எழுகிறது. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்ற கோட்பாட்டை பக்திமகான்கள் நமக்கு கற்பித்தனர். இக்காலச்சூழலில் அக்கோட்பாடு பின்பற்றப்படாமல் காற்றோடு காற்றாகப் பறந்துவிட்டது. சமூகத்தில் எவ்வளவு பொருள் படைத்த செல்வந்தானாக இருந்தாலும் அவனிடம் பிறருக்கு உதவும் மனப்பங்கு இல்லை என்பதை 'காற்றுப்புகாத வீடு' கவிதையில் திலீபன் கண்ணதாசன் அழகுறகாட்சிப்படுத்துகிறார்.

"வீட்டின்
சிறப்புகளை
அடுக்க ஆரம்பித்தார்
முகம்
பார்த்துக் கொள்ளலாம் போல்
மின்னுகின்றன
மார்பிள் தரைகள்
வீட்டு வேலைக்காக
அமர்த்தப்பட்டிருக்கின்ற
மூதாட்டியின்
அறையெது? என்றேன்
சமையலைறயில்
படுத்துக்கொள்வாள் என்றார்
புதுவீட்டிற்கு
வெளியே
திருஷ்டி அரக்கன்
வீட்டுக்காரானின்
சாயல்"

இயற்கை அழகை விஞ்சும் அழகுடன் கட்டப்பட்ட வீட்டில் மனிதர்கள் மனிதநேயம் என்னும் பண்பு மறந்து வீட்டைச்சுற்றியுள்ள காகிதப்பூக்கள் போன்று செயற்கை முகத்துடன் தான் இன்றைய கட்டத்தில் வாழ்கின்றனர் என்பதை இக்கவிதைப் புலப்படுத்துகிறது (Dilipan Kannadasan, 2008). மனிதர்கள்

மட்டுமன்றி விலங்கினங்களின் மீதும் அவனது தாக்ககுதல் நிகழ்த்தப்படுகிறது. முல்லைக்கொடிக்குத் தேரை தந்தும், மயிலுக்குப் போர்வை தந்தும், புறாவின் உயிரைக்காக்க தன்தசையை அளித்தும், அன்பையும் நீதியையும் நிலைநிறுத்தியவர்களின் பெருமையை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இப்பெருமைகளை, இன்றைய மனித சமுதாயம் கதைகளாகவே கேட்டு வருகின்றன. அறிவியல் ஆதிக்கம் மிக்கவுலகில் நற்சிந்தனைகளை விடுத்து வக்கிர குணத்துடன் திகழ்கின்றனர். தன்வாழ்க்கை சுகபோகத்திற்காக பிறவுயிர்களை இம்சித்து தன் உயிர் வளர்க்கும் போக்கு காணப்படுவதை,

“புலி வளையம் தாண்டுகிறது

கிளி சீட்டு எடுக்கிறது

குரங்கு கர்ணம் போடுகிறது

கரடி தாயத்து விற்கிறது

யானை காசு கேட்கிறது

மனிதன் பிடுங்கிக் கொள்கிறான்”

என்று ‘ஊதியம்’ என்னும் கவிதையில் புலப்படுத்துகிறார் கவிஞர். (Vinayagamurugan, 2010)

## வறுமை

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் இம்மூன்றுக்கும் போராடக் கூடியவனை சமுதாயம் வறுமை நிறைந்தவன், வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவன் எனச் சுட்டுகிறார்கள். கல்வி அறிவு பெற்றவனைவிட செல்வம் அதிகம் பெற்றவனே இன்று மேல்நிலையாலான் எனக் கருதப்படுகின்றான். இளமையில் இன்னாதது வறுமை என்று வறுமையின் கொடுமையை ஆன்றோர்கள் எடுத்துரைத்துள்ளனர். இங்கு வறுமையில் வாழும் மக்கள் தங்கள் குடிசையிலும் சூரிய பிரகாசம் விழாதா என ஏங்கும் நிலையை,

“எங்க குடிசை என்னைக்கும்

இருட்டாத்தா இருந்திச்சு

எங்களுக்கு வேண்டியது

ஓரே ஒரு மெழுகுவர்த்திதான்”

என்று பாடுகிறார் (Manjuladevi, 2004). பொதுவுடைமை கருத்து பேசப்பட்ட காலம் தொட்டு வறுமை ஒழிப்புக்குறித்து பேசப்பட்டு வருகிறது. எனினும் இல்லாமை இல்லாத பொதுவுடைமை சமுதாயம் மலரும் காலம் மட்டும் இன்று மலரவில்லை.

## பிச்சைக்காரர்கள்

தன்னிடம் உள்ள பொருள்களைப் பிறரோடு பகுத்துண்டு வாழதலே தமிழர் பண்பு. ‘செல்வத்துப் பயனே ஈதல்’, “வறியார்க் கொன்றீவதே ஈகை” என்னும் கோட்பாடு உடைய மரபில் இன்று ஈதல் எனும் பண்பு மறைந்த காரணத்தால் பிச்சைக்காரர்கள் எனும் ஓர் இனத்தை மனித இனம் தோற்றுவித்துள்ளது. வறுமையின் கொடுமையால் பலர் பிச்சையெடுப்பதால், பிச்சைக்காரர்கள் என்னும் பட்டத்தை பெற்று சமுதாயம் வெறுக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். பிச்சைக்காரர்களின் நிலையை,

“அவர்கள்

பிச்சையெடுக்கவில்லை

கணக்கெடுக்கிறார்கள்

பாரி வள்ளல்களை”

என்றும், (Erode Iraivan, 2009). மேலும் பிச்சையெடுப்பதில் நிகழும் முரணை,

"கோவிலுக்குள்

பூசாரி தட்டில்

காசு விழுந்தால்

காணிக்கை!

வாசலில்

இல்லாதவன்

தட்டில் காசு

விழுந்தால்

பிச்சையா?

ஏணிந்த முரண்பாடு?"

என்றும் ஈரோடு இறைவன் பாடுகிறார் (Erode Iraivan, 2009). இக்கவிதைகள் பாரிவள்ளல்கள் இல்லாத காரணத்தால் பிச்சைக்காரர்கள் தோன்றிவிட்டார்களா அல்லது மக்களின் உழைப்பு குறைந்ததால் பிச்சைக்காரர்கள் தோன்றிவிட்டார்களா என்ற வினாவை நம்மிடம் எழுப்புகிறது. மேலும் 'கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. இன்று கோவிலுக்குள் போனால் காசுடன் போ எனும் புதுமொழியை இக்கவிதை தோற்றுவிக்கிறது. ஏனெனில் கோவிலுக்கு உள்ளேயும் காசு, வெளியேயும் காசு தேவைப்படுகிறது.

## சடங்குகள்

மக்களின் வாழ்க்கைப் பாதையில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. மாற்றங்கள் நிகழ்ந்தாலும் சமூகக் கட்டமைப்புடன் வாழ்வதற்கு சடங்குகளை பண்டைச்சமுதாய மக்கள் உருவாக்கினார்கள். "சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ, பண்பாட்டினுடைய தனிச் சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகத்தின் நம்பிக்கைகளும் இலட்சியங்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன. என்ற ரூத்பெனிடிக்ட்." கருத்து ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவதில் சடங்குகள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை உணர்த்துகிறது (Soma Rajendran, 2003). தொன்மை நாகரிகமுடைய தமிழர் பண்பாட்டில் மனிதனுடைய வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் நம்பிக்கையுடனோ அல்லது மரபு கருதியோ இன்று வரை நடத்தப்படுகின்றன. இவ்வாறு நடத்தப்படும் சடங்குகளில் மேலை நாகரிக மோகத்தின் தாக்கமோ அல்லது நவீன வாழ்க்கைச் சூழல் கருதியோ சடங்குகளில் மாற்றங்களைச் செய்கின்றனர் நாகரிகம் என்ற பெயரில். இது சமுதாயத்தில் ஏற்றபடுத்தும் தாக்கத்தை 'திருமணமொன்றில்' என்னும் கவிதையில்,

"நான் சென்ற

திருமணமொன்றில்

மண்டப வாசலில்

பெண்ணொருத்தி

பொம்மையென்று

சற்று தாமதித்தே

உணர முடிந்தது

பக்கத்தில்

பன்னீர் தொளிக்கும்

ஆண் உருவமும்

மின்சார பொம்மையென்று

யாரோ சொன்னார்கள்

அட்சதை போடு முன்

ஏனோ மேடையை

ஒருமுறை

உற்று பார்த்தேன்”

என்று கவிபாடுகிறார் (Vinayagamurugan, 2010). உணர்வுகள் சங்கமிக்கும் உறவு விழாவில் உணர்வற்ற பொம்மைக்களின் ஆதிக்கம் இன்று நிகழ்வதால் வருங்கால சந்ததிகளின் உறவுகளுக்கும் பாசத்திற்கும் இன்றைய நாகரிக வாழ்க்கை குந்தகம் ஏற்படுத்துவதையே நாம் காணமுடிகிறது. இதே போன்று இறப்பு நிகழ்விலும் மனித மனம் பாசவுணர்வற்ற சுயநலத்துடன் சிந்திப்பதை ‘விடுமுறை நாள்’ என்ற கவிதையில்,

“ஞாயிறு காலை ஆறு மணிக்கு

பாட்டிக்கு நெஞ்சுவலி

படுக்கையிலேயே

உயிர் போனதாக

தொலைபேசி தகவல்

பத்துமணிக்குள்

மாமா கொண்டு வந்த

மலர்கள், பன்னீர் பாட்டில்கள்

மூன்று மணிக்கு

மெயின்ரோட்டைச் சுற்றி

மின்சார சுடுகாட்டில்

மிச்சமான சாம்பலை

கேரி பேக்கொன்றில்

இதெல்லாம்

பத்து மணி நேரத்தில் முடிந்தது”

அடுத்த நாள் திங்கட்கிழமை

அலுவலக தினம்

அதிகம் சிரமம் தரவில்லை பாட்டி”

இன்பமும் துன்பமும் நிறைந்த மனிதனுடைய நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணம் பத்து நேர கணக்கீடாக மட்டுமே இன்றைய சமுதாயத்தால் பார்க்கப்படுகிறது (Vinayagamurugan, 2010).

## முடிவுரை

திணைசார்ந்த வாழ்வில் சமூக ஒழுக்கங்களை நிலைநிறுத்துவதற்கு பண்பாடும் நாகரிகமும் மிக இன்றியாமையானதாகக் கருதப்பட்டுள்ளன. இருப்பினும் இன்றைய தற்காலச்சூழலில் மக்களிடையே பாசவுணர்வும் உறவின் பெருமையும் அன்று மலர்ந்து காய்ந்து விடும் மலராகவே உள்ளது.

மக்களிடையே உழைப்பு மறைந்த காரணத்தாலும் சோம்பல் காரணமாக வறுமையும் பிச்சையெடுக்கும் நிலையும் காணப்படுகிறது, என்பதை இவ்வாய்வு முடிவாகக் கூறுகிறது. அத்துடன் புதுக்கவிதைகள் சமூக நிகழ்வுகளைப் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்படுகின்றன. மேலும் அவை சமூக அவலங்களை கூறி அதனை போக்குவதற்குரிய விழிப்புணர்வுகளையும் வெளிப்படுத்தகின்றன. வறுமை நிலை நீங்கி பொதுவுடைமைச் சமுதாயம் தோன்ற வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. புதுக்கவிதையில் சமூக விழிப்புணர்வு சார்ந்த பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளதால் அவை சார்ந்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

## References


Devanayapavanar, (2017) Pandaith Thamizhar Nagarigamum Panpaadum, Poombukar Publication, Chennai, India.

Dilipan Kannadasan, (2008) Neeril Moozhkiya Surakkudukkai, Kumaran Pathippagam, Chennai, India.

Erode Iraivan, (2009) Thamizhaal Mudiyum, Vijayapathippakam, Coimbatore, India.

Manjuladevi, J., (2008) Maanudam Paadiya Vanambadi, Kavya Publication.Chennai.

Natarajan, T.S., (2011) Thamizhin Panpattu Veligal, New Century Book House, Chennai, India.

Soma Rajendran, (2003) Thamizhiyal Aaivu, Tamil Studies Forum, Trichy, India.

Vinayagamurugan, S., (2010) Kovil Mirugam, Aganazhigai Pathippagam, Chennai, India.



## Funding

No funding was received for conducting this study.


## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.


## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



## Cite this Article

S. Veeralakshmi, Contemporary Life Woes in "Pudhukavithai" (Free Verse), Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 176-181. DOI: https://doi.org/10.54392/ijmrd223S134